# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

**இல. 8,218 — 1936 ம் ஞூ வைகாசிமீ 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை.**


# Part IV.—நான்காம் பாகம்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின பிரகாரம் நீர்கொழும்பில் அசெறப்பா ஒழுங்கையை அகலித்தற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. **A** 516. குறிச்சி—கடல் தெரு, நீர்கொழும்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கடல் தெருவில் இறைவரி இலக்கம் 254 ன் பகுதியைக்கொண்ட ஆதனம் | கட்டடப்படிகளும் விருந்தையுமுள்ள ஓட்டால் வேய்ந்த கட்டடம் | மிசிஸ். மேறி ஜொசபீன் புள்ளேயும் மனுவல் ஜோசேப் நிக்கொலாஸ் புள்ளேயும், அசெறப்பா ஒழுங்கை நீர்கொழும்பு | 0 0 2·35 |
| 2 | கடல் தெருவில் இறைவரி இலக்கம் 254 ன் பகுதியைக்கொண்ட பணிசசமரத்தடி தோட்டம் | தோட்டம், (செய்கை இல்லை) .. | ஷெ .. | 0 0 1·28 |
| 3 | பெரிய தெருவில் இறைவரி இலக்கம் 52 கொண்ட ஆதனம் | தோட்டம், 3 ரெனமென்றுள்ள ஓட்டால் வேய்ந்த கட்டடக் கடையும், 1 படியும், விருந்தையும், ஓலையால் வேய்ந்த கொட்டிலும், உய் வேலியும், 5 வருஷம் சென்ற 3 முருங்கையும் ஒரு எலெக்ரிறிக் ஸ்ராண்டேட்டுமுள்ளது | கடல்தெரு ருேமன் கத்தோலிக்க மிசன் c/o போப் ஆண்டவர், கொழும்பு | 0 0 4·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எண்ணப்படி சஞதிகார மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதஞல் அக்காணிகளை ஆட்சிஒப்புக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரம் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலாமய் 1936 ம் ஞூ ஆனிமீ 29 ந் தேதியிலன்று 10 மணிக்கு நீர்கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஞூ வைகாசிமீ 11 ந் வ.

கார்ள் ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் செவிடர் குருடர் பாடசாலைக்கும கண்டாவெல எஸ்ரேற்றுக்கும் காந்த டேசனுக்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. **A** 401. குறிச்சி—றத்மலான தெற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கண்டாவலஎஸ்ரேற்.. | கறுவாத் தோட்டத்தின் பகுதி, 21 கறுவாப்பத்தையும், 2 கசுமரமும், 1 கொறக்காமரமும், 1 இரும்பு சோதனை பெட்டியும் 2 இரும்பு எலக்ரிறிக் ஸ்ராண்டேட்ஸசுமுள்ளது | என். டி. எச். அப்துல் கவூர், 532, காலி ரேட்டு, கொள்ளுப்பிட்டி | 0 0 21·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எண்ணப்படி சனுதிகார மந்திராலோசனைச் சபை எனக்கு கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஷு ஆனிமீ 30 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ் வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப் படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஷு வைகாசிமீ 11 ந் உ.

எஸ். எவ். அமரசிங்க,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் குண்டசாலையில் பழைய அரண்மனை இருந்த இடத்தை பரிபாலிக்கிற தென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 312. குறிச்சி—குண்டசாலை, உடகம்பகா கோறளை பாத்ததும்பறை, கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொண்டசாலை எஸ்ரேற் | கொக்கோ தோட்டத்தின் பகுதி, 15 வய சுடைய 2 கொக்கோமரங்களுண்டு | அங்கிலோ சிலோன் ஜெனறல் எஸ்ரேற்ஸ் கொம்பனி லிமிட்டட், (ஏசண்டுகள்-போயிஸ் பிறதேஸ் அண்டு கொம்பனி லிமிட்டட், கொழும்பு) | 0 0 6 |
| 2 | பொல்வத்த .. | தென்னந்தோட்டத்தில் பகுதி, 50 வய சுடைய 48 தென்னமரங்களுண்டு | சீ. எச். சோமேஸ் (மயினர்), காடியன்-மிசிஸ். சோமேஸ் எல்லதுவா, வதுளை | 0 2 16·9 |
| 3 | கபடவேவத்த .. | 50 வயசுடைய 1 பலாமரமும் 2 தென்ன மரங்களுமுள்ள தோட்டம் | வெள்ளவத்த முதியான்சிலாகே ரிகிரிபண்டாவும், றன் மெனிக்காவும், கெனகெகுவல | 0 0 16·7 |
| 5 | பொல்வத்த .. | தென்னந்தோட்டத்தின் பகுதி, 20–50 வய சுடைய 425 தென்னமரங்களும் 6 பலா மரங்களும், 20 வயசுள்ள 26 கொக்கோ மரங்களும், 10 வயசுடைய 13 ஈரப்பலா மரங்களும், 2 பிலிஞ்சி, 6 மாமரங்களும் கல்வெட்டுமுண்டு | சீ. எச். சோமேஸ் (மயினர்), காடியன்-மிசிஸ். சோமேஸ், எல்லதுவா, வதுளை | 7 1 22·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றி சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஷு ஜூன் (ஆனி)மீ 15 ந் தேதியிலன்று 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மை யையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1936 ம் ஷு (மே) வைகாசிமீ 11 ந் உ.

ஆர். மொனிபெனி,
உபஅரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நோட்டன்–லுக்கம்ப தெரு கட்டுகிறதென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 17. குறிச்சி—மஸ்கேலியாவும் ஹார்னிஷ்வும், அம்பகமுவா கோறளை, உடபுலத்கம, கண்டி டிஸ்திறிக் மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நோட்டன்–லுக்கம் தெரு, லக்சபானகல, கலேவத்த, தெபேட்டன் எஸ்ரேற் கனுக்குள்ளால் | பீ. டபிள்யு. டி. தெரு .. | திதெபேட்டன் சிலோன் ரீ எஸ்ரேற்ஸ் லிமிட்டட், ஏசன்றுகள்-மெசெஸ் கோடன் பிறேசர் அண் கொம்பனி லிமிட்டட் | 5 1 15·9 |
| 3 | தெபேட்டன் எஸ்ரேற்றுக்குள்ளால் போகும் நோட்டன் லுக்கம்ப தெரு | ஷை .. | ஷை .. .. | 0 1 3·1 |
| 5 | கப்புகஸ்தென்ன எஸ்ரேற்றுக்குள்ளால் போகும் நோட்டன்–லுக்கம்ப தெரு | ஷை .. | யான்சிரீ அசோசியேசன், லண்டன், ஏசன்றுகள்-மெசெஸ் காசன் அண்டு கொம்பனி, லிமிட்டட் | 0 3 12·7 |
| 8 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 7·7 |
| 9 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 2·3 |
| 10 | ஷை .. | ஷை .. | .. .. | 0 0 2·6 |
| 12 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 3 1 31·2 |
| 13 | கப்புகஸ்தென்ன எஸ்ரேற் .. | 15–20 வயசுடைய தேயிலை பத்தைகளுண்டு | ஷை .. .. | 0 0 5·7 |
| 14 | லுக்கம்ப எஸ்ரேற்றுக்குள்ளால் போகும் நோட்–லுக்கம்பதெரு | பீ. டபிள்யு. டி. தெரு .. | அலையன்ஸ் ரீ கொம்பனி ஒவ் சிலோன் லிமிட்டட், ஏசண்டுகள்-மெசெஸ் விற்றேல் அண்ட் கொம் பனி | 4 0 16·3 |
| 15 | நோட்டன்–லுக்கம்ப தெரு .. | ஷை .. | தனியன்சா ரீ கொம்பனி ஒவ் சிலோன் லிமிட்டட், ஏசண்டுகள்-மெசெஸ் லீவிஸ் பிறவுன் அண்ட் கொம்பனி லிமிட்டட் | 0 1 11·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஷு (ஜூன்) ஆனிமீ 20 ந் தேதியிலன்று 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மை யையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1936 ம் ஷு (மே) வைகாசிமீ 11 ந் உ.

ஆர். மொனிபெனி,
உப அரசாட்சி ஏசண்டு, கண்டி.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளபாகேயில் ஓர் பாடசாலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. கடைசிக் கிராமபடம் 117 க்கு 1 ம் சப்லிமென்ற். குறிச்சி—இற்றிகேகம (பகுதி) அம்பகமுவ கோறளே, உடபுலத்கம, கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| காணியினது துண்டு. | பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 66 | வீவடவுன்னுகேன | சேனே, 30 வயசுள்ள 1 பலாமரமும், ஒரு பாடசாலையும் 3 கக்கூசுமுள்ளது | அலக்சாண்டர் மாறம்பே, நாவலப்பிட்டி, அத்தலகமருல லாகே கிரிஅப்பு, கங்காரபிட்டி | 1 2 29·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1976 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றி சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ (ஜூன்) ஆனிமீ 20 ந் தேதியிலன்று 10.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 11 ந் வ.

ஆர். மொனிபெனி.
ஏப அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டம்பொக்க-கற்றுப்பிற்றிய றேட்டில் உள்ள 5/2 ம் இலக்க பாலத்தை மறுபடி கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 442. குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருணுக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவிலி ஹற்பத்துவில் திறகந்றாயே கோறளை கிழக்கில் உள்ள கற்றுப்பிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறகசுப்பிற்றியகும்புற .. | நெல்வயல் .. | கற்றுப்பிற்றியவைச்சேர்ந்த டபிள்யு. பீ. கற்றுப்பிற்றியவும் ரீ. பி. றத்னயக்கவும் | 0 0 25·8 |
| 3 | குறுக்கொஸ்ககலந்தெவத்த .. | தென்னந்தோட்டம் .. | ஷை .. .. | 0 0 14·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ (ஜூலை) ஆடிமீ 3 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு குருணுக்கல் கசேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணுக்கல் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 9 ந் வ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு,
குருணுக்கல் டிஸதிறிக்.

---

## காணி மீட்டெடுக்கும் அறிவித்தல்கள்.

வட மாகாணம், யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சி நாகர் கோவிலிலிருப்பதும், அரசாட்சியாரால் அறுதியாக விற்கப்பட்டதும் இத்துடனிணைக்கப் பட்டிருக்கும் டாப்பில் விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய காணி அதன் சொந்தக்காரனல் எட்டு வருஷத்துதிற்கு மேற்பட்ட காலமாகத் தேடாது விடப்பட்டிருப்பதாக வட மாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தோன்றுகிறபடியாலும் ;

மேற்படி யரசாட்சி யேசன்றர் ஊக்கமாயும் தகுதியாயும் விசாரணை நடத்தியும் மேற்படி காணியின் சொந்தக்காரனை அல்லது சொந்தக்காரனிலிருந்து பிரமாணங்களின் பிரகாரம் உரித்துப்பேசுபவரைத் தேடி யறிந்துகொள்ள வியலாதிருப்பதாலும் ;

வட மாகாண அரசாட்சி யேசன்றர் 1887ம் ஆண்டின் 4ங் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தமக்கிருக்கு மதிகாரத்தைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியுடைய சம்மதத்துடன் இத்தாற் சகலருக்கு மறிவிப்பதென்னவாஞல் :

சொல்லப்பட்ட காணிக்கு உரித்துச்சாதிக்கக்கூடியவர்கள் அவ்வுரித்தை 1936 ம் ஆண்டு ஆனி மாதம் முதலாந் திகதியிலிருந்து ஒரு வருஷ காலத்துள் வட மாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தெரிவியாதுபோனல் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியார் அக் காணியை மீட்டெடுத்துக்கொள்ளுவார் என்பதே.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ம் ஆண்டு வைகாசிமீ 1 ந் வ.

ஈ. ரீ. டைசன்,
அரசாட்சி யேசன்றர், வட மாகாணம்.

காணி டாப்பு.

யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சிப் பிரிவிலுள்ள கற்கோவளக் கிராமத்திலிருப்பதும் 2,227 ம் பிரிதமபடத்தில் 8,175 ந் துண்டாக (உறுதிப் படம் 187,570) விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய ஐயன் கோவில்வெளி யென்றழைக்கப்படுங் காணி.

எல்லைகள் :—வடக்கு : அரசாட்சியாரால் உரித்துச் சொல்லப்படும் ஐயன் கோவில் வெளி

கிழக்கு . அரசாட்சியாரால் உரித்துச் சொல்லப்படும் ஐயன்கோவில் வெளி.

தெற்கு : க. டே. சின்னத்தம்பியும் மறுபேரும் உரித்துப்பேசும் ஐயன்கோவில் வெளி (உறுதிப்படம் 187,392).

மேற்கு : அரசாட்சியாரால் உரித்துச்சொல்லப்படும் ஐயன்கோவில்வெளி யெனப்படுங் காணி.

விசாலம் : 3 றூட்டும் 36 பேட்சசும்

---

வட மாகாணம், யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சி நாகர் கோவிலிலிருப்பதும் அரசாட்சியாரால் அறுதியாக விற்கப்பட்டதும் இத்துடனிணைக்கப் பட்டிருக்கும் டாப்பில் விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய காணி அதன் சொந்தக்காரனல் எட்டு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாகத் தேடாது விடப்பட்டிருப்பதாக வடமாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தோன்றுகிறபடியாலும் ;

மேற்படி அரசாட்சி யேசன்றர் ஊக்கமாயும் தகுதியாயும் விசாரணை நடத்தியும் மேற்படி காணியின சொந்தக்காரனை யல்லது சொந்தக்காரனிலிருந்து பிரமாணங்களின் பிரகாரம் உரித்துப்பேசுபவரைத் தேடி யறிந்துகொள்ள வியலாதிருப்பதாலும் ;

வட மாகாண அரசாட்சி யேசன்றர் 1887 ம் ஆண்டின் 4 ங் கட்டளைச் சட்டத்தின் பிரகாரந் தமக்கிருக்கு மதிகாரத்தைக்கொண்டு அதியுத்தம தேசாதிபதியுடைய சம்மதத்துடன் இத்தாற் சகலருக்கு மறிவிப்பதென்னவாஞல் :

சொல்லப்பட்ட காணிக்கு உரித்துச் சாதிக்கக் கூடியவர்கள் அவ்வுரித்தை 1936 ம் ஆண்டு ஆனி மாதம் முதலாந் திகதியிலிருந்து ஒரு வருஷ காலத்துள் வடமாகாண அரசாட்சி யேசன்றருக்குத் தெரிவியாதுபோனல் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியார் அக்காணியை மீட்டெடுத்துக்கொள்ளுவார் என்பதே.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1936 ம் ஆண்டு வைகாசிமீ 1 ந் வ.

ஈ. ரீ. டைசன்,
அரசாட்சி யேசன்றர், வடமாகாணம்.

காணி டாப்பு.

யாழ்ப்பாணப் பகுதி வடமராட்சிப் பிரிவிலுள்ள கற்கோவளக் கிராமத்திலிருப்பதும் 2,227 ம் பிரதமபடத்தில் 8,171 ந் துண்டாக (உறுதிப் படம் 187,568) விபரிக்கப்பட்டிருப்பதுமாகிய ஐயன்கோவில்வெளி யென்றழைக்கப்படுங் காணியின் பகுதி.

எல்லைகள் :—வடக்கு : பிரதமபடம் த 487 இல் 4 ங் கண்டமாகக் கண்டிருக்கும் மண் தெரு ;
கிழக்கு : கே. முத்துக்குமாரு அவர்கள் உரித்துப்பேசுங் காணி ;
தெற்கு : அரசாட்சியார் உரித்துப்பேசும் ஐயன்கோவில் வெளிக்காணி ;
மேற்கு : காலஞ்சென்ற நாகப்பர் வல்லிபுரத்தின் சொந்தக்காரரால் உரித்துப்பேசப்படும் காணி.
விசாலம் : ஏறக்குறைய ஒரு ஏக்கர்.

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1936 ம ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி துவக்கம் 1937 ம ஆண்டு புரட்டாதி மாசம் 30 ந் திகதி வரையிலுள்ள ஒரு வருடக்காலத்துக்கு இதனடியிற் காட்டப்படும் புத்தளம் சலாபம் டிஸ்திறிக்குகளிலுள்ள ஆயக்குத்தகைகளை வாங்குவதற்கு விரும்புவோர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை ஒழுங்காக கையொப்பமும் திகதியுமிட்டு புத்தளம் உதவி ஏசண்டுத்துரை யவர்களுக்கு 1936 ம் ஆண்டு ஆனிமீ 18 ந் திகதி, முற்பகல் 10 மணிக்குமுன் ஒவ்வோர் கேள்விக்காரரும் முகா முகமாய்க் கொடுக்கவேண்டியது. மேற்குறித்த நேரத்தின்பின் கொடுக் கப்படும் அல்லது தவால்மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள ஏற்கப்படமாட்டா.

கேள்விப்பத்திர மனுப்பப்படும் உறைகள் ஒவ்வொன்றிலும் மேற் பக்கத்து இடது மூலையில் " ஆயக்குத்தகை கேள்விப்பத்திரம் " என்று எழுத வேண்டியது.

இதனடியிற் காட்டப்படும் ஒவ்வோர் ஆயத்துக்கும் பிறம்புபிறம்பான கேள்விப்பத்திரங்க ளனுப்பப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் கேள்வி ஏற்றவுடன் கேள்வித்தொகையின் பத்திலொன்று முற்பணமாகக் கட்டவேண்டியது. பின்னா உத்தம தேசாதிபதியவர்கள மேற்படி கேள்வியை அங்கீகாரஞ்செய்து அவ்வங்கீகாரம் கேள்விக்கார ருக்கு அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் கேள்வித்தொகையின் அரைவாசிக்குப் பெறுமதியான ஆதனம் அல்லது கேள்வித்தொகையின் மூன்றி லொரு பங்கை ரொக்கமாகப் பிணைகட்டவேண்டியது.

முடிக்குரிய பிரக்கிராசியார் கேள்விக்காரர் பிணைகொடுக்கு மாதனங் களி னுறுதிகளைப் பரிசோதனைசெய்யவும் பிணையுறுதியை எழுதவும் சரியெனத் தீர்ப்புச்சொல்லவும்வேண்டிய செலவுகளுக்காகவும் 1919 ம் ஆண்டு 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி தேள்வையான முத்திரைச் செலவுக்காகவும் தேள்வையான பணத்தை கேள்விக்காரரே கட்டவேண்டி யது.

பிணைகொடுக்கு முறுதிகளுடன் அவ்வுறுதிகளிற் சொல்லப்பட்ட ஆத னங்களின் பெயரால் ஒரு பிசகுகளுமில்லை யென்று பூமி பதிவு கந்தோர் தலைவரிடமிருந்து ஓர் அறிக்கைப்பத்திரமு மனுக்கப்படவேண்டும். இப்பத்திரங்களின் செலவுகளெல்லாம் பிணை கொடுப்பவர்களே பொறுக்க வேண்டும்.

கேள்விகளின் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை ஏற்றுக்கொள் ளாது விடவும் அல்லது கேள்விகளின் சில பாகங்களையே ஏற்றுக்கொள் ளுந் தத்துவம் உதவி ஏசண்டுத்துரை யவர்களுக்குண்டு.

இன்னும் விபரங்கள் தேள்வையாயின் புத்தளங் கச்சேரியிற் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வாய்க்கால்கள்.

1. நாத்தாண்டியா. 2. மூனுத்துப்பிரிவு. 3. பாலாவி

துறைகள்.

1. புத்தளம் ஏத்தாலை.
2. புத்தளம் கற்பிட்டி.
3. கற்பிட்டி காரைத்தீவு.
4. கற்பிட்டி முகத்துவாரம்.
5. சலாபம் முகத்துவாரம்.

ஏ. ஈ. கிறிஸ்ரோவெல்ஸ்,
புத்தளம் உதவி ஏசண்டுத்துரை அவர்கள்.

புத்தளம் கச்சேரி,
1936 ம் ஞு வைகாசிமீ 8 ந வ.

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவிற் சுட்டிய 1 ம் செடூலின் B பிரிவின்படி அறிவித்தல்,

மட்டக்களப்பு தாமரைக்கேணி பொன்னையா கந்தையா ஆகிய நான் என்னை மட்டக்களப்பு டிஸ்திறிக்கில், தமிழ்ப்பாஷையில், கடமைசெலுத் தும் பிரசித்த நொத்தாரிஸ் ஆக நியமிக்கும்படி வருகிற ஜூலை மாதம் 11 ந் திகதிக்குப்பின் பதிவுகாரிய தலைவருக்கு விண்ணப்பிக்க எண்ணி யிருக்கிறேன் என்பதை இதனாலறியத்தருகின்றேன்.

தாமரைக்கேணி, மட்டக்களப்பு, பொ. கந்தையா,
1936 ம் ஞு சித்திரைமீ 8 ந வ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.